# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## கற்றல் கையேடு - பரதநாட்டியம்
## தரம் 6

## தவணை – 1

1. **இயற்கைச்சூழலில் காணப்படும் அசைவுகளை இனங்காணுதல்**
    - மரக்கிளைகள் அசைதல்
    - செடி கொடிகள் அசைதல்

**2.இயற்கை நிகழ்வுகளைப் பாவனை செய்தல்**

- அருவி பாய்தல்
- மழை பெய்தல்
- கடலலை

**3.“சின்னச்சின்ன சிறுமியர் நாமே….” என்ற அபிநயப்பாடலை அபிநயித்தல்**

- இராகம் - ஆனந்தபைரவி
- தாளம் - சதுஸ்ர ஏகம்

4. **நடனத்தின் அடிப்படைப் பயிற்சிகளை செய்தல் - நமஸ்காரம் செய்தல்**

- நமஸ்காரம் என்பது வணக்கம் செய்யும் முறையாகும்.
- நமஸ்கார வகைகளாவன அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், பெரியோர்களை வணங்குதல் என்பன.
- நடனத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நமஸ்காரம் செய்யப்படும்.
- அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும் பூமாதேவிக்கும் நடன குற்றங்களைப் பொறுத்தருளும் படி வேண்டி நமஸ்காரம் செய்யப்படும்.
- சமநிலை, முழுமண்டி ஆகியன நமஸ்காரத்தின் போது பயன்படுத்தும் பாதநிலைகளாகும்.
- கடகாமுகம்,சிகரம்,சதுரம் என்பன ஒற்றைக்கை முத்திரையாகவும் அஞ்சலி இரட்டைக்கை முத்திரையாகவும் பயன்படும்.
- நமஸ்காரத்தில் கடகாமுகம் குருவுக்கும், சிகரம் அஷ்டதிக்குப்பாலகர்களுக்கும் சதுரம் பூமாதேவிக்கும், அஞ்சலி சபையோருக்கும் வணக்கம் செலுத்துவதாக அமையும்.

5. **தியானஸ்லோகம்**

நடனக்கலைக்குரிய தெய்வம் நடராஜரை வணங்கும் பாடல்

ஸ்லோகம் - **ஆங்கிகம் புவனம் யஸ்ய வாச்சிகம் ஸர்வ வாங்மயம்/**

**ஆகார்யம் சந்திர தாராதி தம் நுமஸ் சாத்வீகம் சிவம்//**

கருத்து - உலகத்தை உடம்பாகவும் பேசும் வார்த்தைகள் யாவும் ஒரே பாஷையாகவும் சந்திர நட்சத்திரங்களை ஆபரணங்களாக அணிந்த பரிசுத்தமான சிவபெருமானே உம்மை நாம் வணங்குகின்றோம்.

| சொல் | பொருள் | உபயோகிக்கும் முத்திரைகள் |
|---|---|---|
| 1. ஆங்கிகம் | உடம்பு | பிரளம்பம் |
| 2. புவனம் | உலகம் | சூசி |
| 3. யஸ்ய | யாருடைய | முகுளத்திலிருந்து அலபத்மம் |
| 4. வாச்சிகம் | வார்த்தைகள் | பிரளம்பம் |
| 5. ஸர்வ | எல்லாம் | சூசி |
| 6. வாங்மயம் | மொழிகள் | திரிலிங்கத்திலிருந்து சந்திரகலா |
| 7. ஆகார்யம் | ஆபரணம் | சதுரம் |
| 8. சந்திர | சந்திரன் | அலபத்மம் |
| 9. தாராதி | நட்சத்திரம் | காங்கூலபேதம் |
| 10. தம் | உம்மை | சூசி |
| 11. நுமஸ் | வணக்கம் | அஞ்சலி |
| 12. சாத்வீகம் | பரிசுத்தமான | ஹம்ஸாஸ்யம் |
| 13. சிவம் | சிவன் | சிவலிங்கம் |

**6. ஒற்றைக்கை முத்திரைகளை அறிந்து செய்து காட்டுதல்**

- மறுபெயர் - அஸம்யுதஹஸ்தம்
- எண்ணிக்கை – 28

| ஒற்றைக்கை முத்திரை | கருத்து |
|---|---|
| 1. பதாகம் | கொடி |
| 2. திரிபதாகம் | மரம் |
| 3. அர்த்தபதாகம் | அரைக்கொடி |
| 4. கர்த்தரீமுகம் | கத்தரிக்கோல் |
| 5. மயூரம் | மயில் |
| 6. அர்த்தச்சந்திரன் | அரைமதி |
| 7. அராளம் | வளைந்து |
| 8. சுகதுண்டம் | கிளிமூக்கு |
| 9. முஷ்டி | முட்டிக்கை |
| 10. சிகரம் | மலையுச்சி |
| 11. கபித்தம் | விளாம்பழம் |
| 12. கடகாமுகம் | வளையின் வாய் |
| 13. சூசி | ஊசி |
| 14. சந்திரகலா | அரைச்சந்திரன் |
| 15. பத்மகோஷம் | பழம் |
| 16. ஸர்ப்பசீர்சம் | பாம்பு படர்க்கை |
| 17. மிருகஷீர்சம் | மான் தலை |
| 18. சிம்மமுகம் | சிங்கத்தின் முகம் |
| 19. காங்கூலம் | பழம் |
| 20. அலபத்மம் | மலர்ந்த தாமரை |
| 21. சதுரம் | சாதூர்யம் |
| 22. பிரமரம் | தேனீ |
| 23. ஹம்ஸாஸ்யம் | அன்னத்தின் அலகு |
| 24. ஹம்ஸபக்ஷம் | அன்னத்தின் சிறகு |
| 25. ஸம்தம்ஷம் | இடுக்கி |
| 26. முகுளம் | மொட்டு |
| 27. தாம்ரசூடம் | கோழி |
| 28. திரிசூலம் | திரிசூலம் |

7. **பரதநாட்டிய அடவுகளை ஆடிக்காட்டுதல் - தட்டடவு**
    - கால்களைத் தட்டிச் செய்வது தட்டடவாகும்
    - இது 08 வகைப்படும்

8. **பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள்**
    - பக்தியுணர்வு
    - அழகுணர்ச்சி
    - ரசனை
    - விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு
    - உடலுறுதி சமநிலை
    - ஒற்றுமையும் உதவி செய்யும் மனப்பாங்கும்
    - பாராட்டுக்கள் கிடைக்கும்

9. **குரு வணக்கம்**
    மாதா, பிதா, குரு ஆகியோருக்கு வணக்கம் செலுத்துதல்
    நடராஜரை வணங்கி தியானஸ்லோகம் கூறுவது போன்று குருவை வணங்கி குருஸ்லோகம் சொல்லுதல்

**ஸ்லோகம்**

**குருர் ப்ரம்மா குரு விஷ்ணு குரு தேவோ மஷே் வரஹ**

**குரு சாக்ஷ்யாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீகுரவே நமஹ**

10. **நடனக்கலை தோன்றிய உலகியல் வரலாறு**
    - ஆதிகால மனிதன் சந்தோஷ மிகுதியால் குதித்தது நடனமாகியது.
    - கோபம் வந்தால் சத்தமிட்டு கூச்சலிட்டும், விலங்குகள் பறவைகள் போல் தானும் குரலெழுப்பியது இராகமாகியது.
    - கைகளை ஒத்திசைவுடன் தட்டியது தாளமாகியது.
    - பாவ இராக தாளம் என்பன மொழி தோன்றும் முன்னரே தோன்றியது.
    - இயற்கையை பாவனை செய்ததன் மூலம் ஆதிமனிதன் நடனத்தைப் புலப்படுத்தினான்.

## தவணை – 2

**1.கிராமிய நடனங்களை இரசித்து விங்கிக் கொள்ளல்**

- கும்மி – மகிழ்ச்சிக்காக ஆடப்படும் நடனம்
- குரகம் - அம்மனை வேண்டி பக்கியுடன் ஆடப்படும் நடனம்

2. **"ஆசானாக நானிருந்தால்…"என்ற பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆடுதல்**
3. **பரத அடவுகளை ஆடிக்காட்டுதல்**
   **தட்டடவு 5, 6, 7, 8**
   **நாட்டடவு -1,2**
   - கால்களை நாட்டித் தட்டுதல் நாட்டடவாகும் இதில் 8 அடவுகள் உண்டு.
   - ஆதி தாளத்தில் அமைந்தள்ளது
   - 1ம்,2ம்,3ம்,4ம் திரிபதாக முத்திரையுடன் செய்யப்படும்

4.**தட்டடவின் சொற்கட்டுக்களை அறிதல்**

- 1,2 ஆவது – தெய்யா தெய் -ஆதிதாளம்
- 3ஆவது – தெய்யா தெய்யா தெய் -ரூபகதாளம்
- 4ஆவது – தெய்யா தெய்யா தெய்யா தெய் - ஆதிதாளம்
- 5ஆவது – தெய்யா தெய்யா தெய் தெய் தாம் - ஆதிதாளம்
- 6ஆவது - தெய் தெய் தாம் தெய் தெய் தாம் - ஆதிதாளம்
- 7ஆவது - தெய் தெய் தத்த தெய் தெய் தாம் - ஆதிதாளம்
- 8ஆவது – தெய் தெய் தெய் தெய் திதி தெய் -ரூபகதாளம்

**5.பல்வேறு நடைகளில் ஆடற்கோலங்கள் அமைத்தல்**

- திஸ்ர நடையின் செற்கட்டு - தகிட
- சதுஸ்ர நடையின் சொற்கட்டு - தகதிமி

**6.பரத எண்ணக்கருக்களை விளக்குதல்**

**தண்டியம்**

- தண்டியம் என்பது ஒரு கோல்
- ஐந்தாம் ஆண்டில் தண்டியம் பிடித்த மாணவர்கள் ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற்று 12ம் ஆண்டில் அரங்கேறுவர் என சிலப்பதிகாரம் கூறுகிறது
- விஜயதசமி அன்று சிலம்ப கூடத்தில் சதுரமாக நெல் பரப்பி நாட்டியம் கற்றுக் கொள்பவரை நாட்டிய ஆரம்ப முறைக்கேற்ப அரைமண்டியில் நிற்க வைத்து பட்டுத்துணி சாற்றியிருக்கும் கோலை பூசை செய்து கையில் கொடுப்பர்.
- அக்கோலை வயது முதிர்ந்த தேவரடியார்கள் இரு புறமும் பிடித்துக் கொண்டு மாணவியின் கையை கோலின் நடுவே பிடிக்க வைத்து குரு, முதல் அடவை மாணவியின் காலைத் தெய்யாத் தெய் என்று அழுத்தமாக நெல்லின் மேல் அடித்துக் கற்றுக் கொடுப்பர்

**7. பரத எண்ணக்கருக்களை விளக்குதல்**

**நாட்டியக் கிரமம்** - நாட்டியக் கிரமம் என்பது நாட்டியம் செய்யும் ஒழுங்கு முறை

**ஸ்லோகம்** - யதோ ஹஸ்தஸ் ததோ திருஸ்டிர்

யதோ திருஸ்டிஸ் ததோ மனஹ

யதோ மனஸ் ததோ பாவஹ

யதோ பாவகஸ் ததோ ரஸஹ

**கருத்து** - கைகள் எங்கு செல்கின்றதோ அங்கு கண்கள் செல்ல வேண்டும் கண்கள் எங்கு செல்கின்றதோ அங்கு மனம் செல்ல வேண்டும் மனம் எங்கு செல்கின்றதோ அங்கு பாவம் செல்ல வேண்டும் பாவம் எங்கே செல்கின்றதோ அங்கு ரஸம் இருக்க வேண்டும்.

**8. பரத எண்ணக்கருக்களை விளக்குதல்**

**கோயில் நடனமாதர்**

- கோயில் நடனமாதர்களைத் தேவதாசிகள் தேவரடியார் என அழைப்பர்.
- தேவதாசி என்பதற்கு இறைவனின் பணிப்பெண் என்பது பொருள்
- இவர்கள் இசை, நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவர்கள்
- கோயில் திருப்பணிகளுக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள்
- ரிஷபத்தளியார், தேவரடியார், தளிர்சேரிப்பெண்டுகள் எனப் போற்றப்பட்டனர்
- தஞ்சை பெரிய கோவிலில் 407 தேவரடியார்கள் கலைப்பணி புரிந்துள்ளனர்

**9. கலைகளின் கலாசாரப் பின்னணியை அறிந்து கொள்ளுதல்**

**கிராமிய நடனங்கள்**

- கிராமிய மக்கள் ஒன்று கூடி ஆடப்படும் ஆட்டம்
- பிறப்பில் தாலாட்டிலிருந்து இறப்பில் ஒப்பாரிவரை வாழ்க்கை இரசணை மிக்கதாக திகழ்கின்றது
- இவ்வாறான நடனங்கள் 3 வகைப்படும்

1. மகிழ்ச்சிக்குரிய நடனம் - உ+ம் கும்மி, கோலாட்டம்
2. வேண்டுதலுக்குரிய நடனம் - கரகம், காவடி
3. தொழில்சார் நடனம் - அரிவிவெட்டுநடனம், மீனவர்நடனம், கொழுந்துநடனம்

**தவணை- 03**

**1.பரதநாட்டிய ஆடை, ஆபரணங்களை அறிந்து கொள்ளல்**

- ஆடை- பஞ்சகச்சம்
- ஆபரணங்கள் -உச்சிப்பட்டம், நெற்றிப்பட்டம், சிமிக்கி, மயிர்மாட்டி, தோடு, சந்திரப்பிறை, சூரியப்பிறை, ராக்கொடி,ஒட்டியாணம், வளையல், மூக்குத்தி, பிலாக்கு சலங்கை, பதக்கம், கைவங்கி

**2.காவடி நடனத்தை ஆக்கி ஆடிக்காட்டுவர்**

- வேண்டுதலுக்காக ஆடப்படும் நடனம் முருகனை வேண்டி பக்திசிரத்தையுடன் ஆடப்படுகிறது.

3.**பரதநாட்டிய அடவுகளை ஆடிக்காட்டுதல்**

நாட்டடவு – 3,4

4.**பரத முத்திரைகளை அறிந்து செய்து காட்டுதல்.**

**இரட்டைக்கை முத்திரைகள்**

- மறுபெயர் - ஸம்யுத ஹஸ்தங்கள்
- எண்ணிக்கை - 24

| இரட்டைக்கை முத்திரை | கருத்து |
|---|---|
| 1. அஞ்சலி | வணக்கம் |
| 2. கபோதம் | புறா |
| 3. கர்க்கடகம் | நண்டு |
| 4. சுவஸ்திகம் | குறுக்கிட்டது |
| 5. டோலம் | ஊஞ்சல் |
| 6. புஸ்பபுடகம் | மலர்க்கூடை |
| 7. உத்சங்கம் | அணைவு |
| 8. சிவலிங்கம் | சிவலிங்கம் |
| 9. கடகாவர்த்தனம் | அர்ச்சித்தல் |
| 10. கர்த்தரீசுவஸ்திகம் | குறுக்குக்கத்தரிக்கோல் |
| 11. சகடம் | வண்டி |
| 12. சங்கு | சங்கு |
| 13. சக்கரம் | சக்கராயுதம் |
| 14. சம்புடம் | பெட்டி |
| 15. பாசம் | கயிறு |
| 16. கீலகம் | பிணைப்பு |
| 17. மத்சயம் | மீன் |
| 18. கூர்மம் | ஆமை |
| 19. வராகம் | பன்றி |
| 20. கருடன் | கருடப்பறவை |
| 21. நாகபந்தம் | பாம்பின் கட்டு |
| 22. கட்வா | கட்டில் |
| 23. பேருண்டம் | பேருண்டப்பறவை |
| 24. அவகித்தம் | ஆடல் |

**5.பரதநாட்டிய எண்ணக்கருக்களை விளக்குதல்.**

1. **தெய்வங்களுக்கும் கலைகளுக்குமிடையிலான தொடர்பு**
    - நடராஜப்பெருமானின் நடனத்தோற்றங்கள் 108 கரணசிற்பங்களாக திகழ்கின்றன.
    - நர்த்தன கணபதி நடனம் ஆடிய போது சந்திரன் சிரிக்கச் சாபம் பெற்றுத் தேய்ந்து போன கதை
    - சிவன், பார்வதி நடனமாட சரஸ்வதி வீணை வாசித்தல்.
    - கண்ணபிரான் காளிங்கன் எனும் பாம்பினை அடக்கி நர்த்தனம் புரிந்த சம்பவம்

**2.பரதத்தின் தோற்றம்**

- பரதமானது பாரத தேசத்தின் தமிழகத்திற்குரிய சாஸ்திரிய நடனமாகும்.
- பரதத்தின் முழுமுதற் கடவுள் நடராஜப்பெருமான் ஆவார்.
- பரதம் இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகிய நால்வேதங்களின் தொகுப்பாகும்.
- பரத எனும் பதம் நடிகன் என்பதைக் குறிக்கும்.
- பாவம், ராகம், தாளம் என்ற மூன்றையும் இலட்சணங்களாகக் கொண்டுள்ளது.
- பரத முனிவரால் இலக்கணம் வகுக்கப்பட்டது.

**3.நாட்டிய இலட்சணம்**

- நாட்டியத்தை அழகுபடுத்தும் அம்சங்களை நடனத்தின் இலட்சணங்கள் எனலாம்.
- நாட்டிய இலட்சணங்கள் பாவம், இராகம், தாளம் என்பனவாகும்.
- பாவம் என்பது உள்ளத்தில் உந்தும் உணர்ச்சிகளை முகத்தினால் வெளிப்படுத்துவதாகும்.
- ராகம் என்பது ஸ்வரக் கோர்வைகளினால் அலங்கரித்து ஆலாபனை செய்வதாகும்.
- தாளம் என்பது பாட்டின் கால அளவைக் கையினாலோ அல்லது கருவியினாலோ தட்டுவதாகும்.

**6.நடன கலாசாரபின்னணியை விளங்கிக்கொள்ளல்.**

கிராமிய நடனங்கள்

<u>கும்மி</u>

- கும்மி நடுத்தர சமூகத்தனரால் வயது வேறுபாடின்றிக் கைகளைத்தட்டி வட்டமாக நின்று ஆடப்படும்.
- கிராமப்புற உழவர்கள் மாரியம்மன், பகவதியம்மன், முத்தாலம்மனை வேண்டி நடாத்தும் முளைப்பாரி எனும் நிகழ்வில் கும்மி ஒரு முக்கிய நிகழ்வாக ஆடப்படும்.
- இது ஆண், பெண் இருபாலாராலும் ஆடப்படும்.
- இதில் கைத் தட்டு, விரல் தட்டு, அஞ்சலித்தட்டு என வகைகள் உண்டு.
- இந் நடனம் பல்வேறு கால ஜதிகளுடன் ஆடப்படும்.
- இதற்குரிய பாடல்கள் மிகவும் சாதாரண இராகங்களில் அமைந்து “தானானே” எனும் சந்தத்தில் பாடப்படும்.
- கிராமியக் கலாசார உடை இதன்போது அணியப்படும்.
- ஜரிகை பாவடை சட்டை தாவணியுடன் முத்துமாலை, வளையல், ஒட்டியாணம் போன்றவற்றை அணிந்து ஆடுவர்.
- இந்நடனத்திற்கு ஹார்மோனியம்,டோல்கி ஆகியவை பக்கவாத்தியங்களாகப் பயன்படும்.
- “முளைப்பாரி” யின் போது உறுமி மேளம் எனும் வாத்தியக் கருவி பயன்படுத்தப்படும்.

**<u>கோலாட்டம்</u>**

- கோல் கொண்டு ஆடுவதால் கோலாட்டம் எனப்படும்.
- நடுத்தர சமூகத்தினரால் வயது வேறுபாடின்றி வட்டமாக நின்று ஆடப்படும்.
- கோலாட்டத்தில் பின்னல் கோலாட்டம் எனும் ஒரு வகையுண்டு.
- ஆண், பெண் இருபாலாராலும் இந்நடனம் ஆடப்படும்.
- கோல்களின் நீளம் 8-10 அங்குலம்.
- ஆண்கள் தாறுபாச்சியும் பெண்கள் ஜரிகை பாவடைசட்டை, சேலையுடன் முத்துமாலை, வளையல், ஒட்டியாணம் போன்றவற்றை அணிந்து ஆடுவர்.
- இந்நடனத்திற்கு ஹார்மோனியம்,டோல்கி ஆகியவை பக்கவாத்தியங்களாகப் பயன்படும்.

7. **நடன கலாசாரபின்னணியை விளங்கிக்கொள்ளல்.**

பன்னிரு மாதங்களும் விழாக்களும்

| மாதங்கள் | விழாக்கள் |
|---|---|
| 1. தை மாதம் | தைப்பொங்கல், தைப்பூசம், |
| 2. மாசி மாதம் | சிவராத்திரி, மாசிமகம் |
| 3. பங்குனி மாதம் | பங்குனி உத்தரம் |
| 4. சித்திரை மாதம் | வருடப்பிறப்பு, சித்திரைப் பௌர்ணமி |
| 5. வைகாசி மாதம் | விசாகம் |
| 6. ஆனி மாதம் | உத்தரம் |
| 7. ஆடி மாதம் | ஆடி அமாவாசை, ஆடிப்பிறப்பு |
| 8. ஆவணி மாதம் | விநாயக சதுர்த்தி |
| 9. புரட்டாதி மாதம் | நவராத்திரி |
| 10. ஐப்பசி மாதம் | தீபாவளி, கந்தசஷ்டி |
| 11. கார்த்திகை மாதம் | திருக்கார்த்திகை |
| 12. மார்கழி மாதம் | திருவெம்பாவை, திருப்பாவை |

8. **நடன கலாசாரபின்னணியை விளங்கிக்கொள்ளல்.**

அசல பெரஹரா

- சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களில் அசலபெரஹரா ஒன்றாகும்.
- புனிதப் பேழையில் யானைத்தந்தங்கள் வைக்கப்பட்டு ஊர்வலமாக கொண்டுவரப்படும்.
- ஊர்வலத்தின் போது கோலாட்டம், கும்மி, செம்பு, பொய்க்கால் நடனம், சுளகுநடனம், உலக்கை நடனம்,தீப்பந்தாடல் போன்ற பல்வேறு நடனங்களை ஆடி வருவார்கள்.
- அசலபெரஹரா ஆடி அல்லது ஆவணி மாதத்தில் இடம் பெறும்.
- ஆடி மாதத்தில் இடம்பெறும் அசலபெரஹராவில் புத்தபெருமானை நினைத்து நாடு பூராகவும் விகாரைகளில் அன்னதானங்கள் வழங்குதல், தியானம் மற்றும் புண்ணிய கருமங்களில் மக்கள் ஈடுபடுவர்.

தொகுப்பு - திருமதி மலர்விழி பிறேம்குமார் (யா/இளவாலை திருக்குடும்பகன்னியர்மடம் ம.வி)

திருமதி சிறிதேவி கண்ணதாசன் (ஆசிரியஆலோசகர், மா.க.தி)